**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.MCOP. 60 /2020**

**Deposition of P.W.2- ஹேமலதா**

**Dated:** _07.02.2025

**<u>1, 2 வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை

**<u>3வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. என்னை மனுதாரர் சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார். இறந்தவர் பெயர் தெரியாது. மனுதாரர் எனக்கு உறவினர் இல்லை. பழக்கமானவர். மனுதாரர் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குற்ற வழக்கில் நான் சாட்சி இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. விபத்து குறித்து நான் புகார் கொடுக்கவில்லை. இறந்து போனவர் ஓட்டி வந்த வாகனம் மேற்கிலிருந்து – கிழக்கு நோக்கி வந்தது இறந்தவர் வடக்கிலிருந்து – தெற்கு நோக்கி சாலையை கடந்தார் என்றால் சரியல்ல. சம்பவ நேரத்தில் நான் எந்த இடத்தில் இருந்தேன் என்றால் பஸ் ஏறுவதற்காக வந்து கொண்டிருந்தேன். இறந்து போனவர் சாலையை கடக்கும் போது விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. TN 75 AE 1078 வாகனம் மேற்கிலிருந்து – கிழக்கு நோக்கி வந்தது என்றால் சரிதான். 1வது எதிர்மனுதாரர் வாகனத்தை மெதுவாக ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. விபத்திற்கு 1வது எதிர்மனுதாரர் பொறுப்பில்லை என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்டு எவ்வளவு காலத்திற்கு பிறகு மனுதாரரை பார்த்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. மனுதாரரிடம் இறப்பு குறித்து கேட்ட போது நான் விபத்தை பார்த்ததை சொன்னேன். இறந்து 2, 3 மாதம் கழித்து மனுதாரரிடம் சொன்னேன். முழுக்க முழுக்க இறந்து போனவரின் கவனக்குறைவால் விபத்து

ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் காயம்பட்டவரை மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை. விபத்து ஏற்பட்ட உடன் கூட்டம் கூடினார்கள். நான் பேருந்து நிறுத்ததில் நிற்கும் போது விபத்து நடக்கவில்லை. எங்கள் வீட்டிலிருந்து மெயின் ரோட்டிற்கு வரும் போது மெயின் ரோட்டில் விபத்து நடந்தது. காயம்பட்டவரை நான்அருகே சென்று பார்க்கவில்லை. சம்பவ இடத்தில் பேருந்து நிறுத்தம் இல்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தின் அருகே எனது வீடு இல்லை என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை பார்க்காமல் மனுதாரருக்கு உதவி செய்யும் நோக்கத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.